

விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் திண்டிவனத்தில் மாவட்ட அவைத் தலைவரும், செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் தலைமையில் நடைபெற்ற திமுக அவசர செயற்குழு கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் ப.சேகர் சிறப்புரையாற்றினார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், சீத்தாபதி சொக்கலிங்கம், செந்தமிழ் செல்வன், மாவட்ட பொருளாளர் ரமணன், துணை செயலாளர்கள் ரவிக்குமார், அமுதா ரவிக்குமார்,.திண்டிவனம் நகர செயலாளர் கண்ணன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் உள்ளனர்.



கோவை தெற்கு மாவட்ட திமுக சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்பட்ட கோவை தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட தொகுதி தேர்தல் பார்வையாளர்கள் அறிமுகக் கூட்டம், தமிழ்நாடு மின்சாரம் மது விலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி தலைமையில். கோவை தெற்கு மாவட்ட திமுக செயலாளர் தளபதி முருகேசன் முன்னிலையில் கருமத்தம்பட்டி எஸ்.என்.கே. திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தொகுதி பொறுப்பாளர்கள் சிந்து ரவிச்சந்திரன், ரத்தினசாமி, பி.எ.சேகர், அருள்மொழி அவைத்தலைவர் மயூரா சுப்ரமணியம் மாவட்ட துணை செயலாளர்கள் சாமிநாதன் கனிமொழி, பொன்னுசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஏர்போர்ட் ராஜேந்தர் இருகூர் சந்திரன் கோழிக்கடை கணேசன், அமுதபாரதி மாநில தகவல் தொழில்நுட்ப இணைச்செயலாளர் டாக்டர் மகேந்திரன் முன்னாள் மத்திய அமைச்சர் மு.கண்ணப்பன் நெசவாளர் அணி நாகராஜ், நாகராஜ், பனப்பட்டி தினகரன், தென்றல்செல்வராஜ் மருதமலை சேனாதிபதி மேயர் கழக பிரச்சாரக்குழு செயலாளர் உமாமகேஸ்வரி, அணிகளின் அமைப்பாளர்கள் இளைஞரணி துணை அமைப்பாளர்கள் பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

### சேலம் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட

# சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம் சிறப்புரை!

*சேலம், அக். 28-*

சேலம் கிழக்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக கூட்டம் வாழப்பாடியில் உள்ளதளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம், கலைஞர் அரங்கில் சேலம் கிழக்கு மாவட்ட கழக அவைத்தலைவர் மு. ரா.கருணாநிதி தலைமையில், தலைமை கழகத்தால் அறிவிக்கப்பட்டுள்ள சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் 081கெங்கவல்லி க.ஆனந்த், விழுப்புரம் வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், 082 ஆத்தூர் எம்.எஸ். கணேஷ்குமார், கடலூர் மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், 083 ஏற்காடு சி.ஆனந்தகுமார், மாநில இளைஞர் அணி துணை செயலாளர், 091 வீரபாண்டி டி.கே.கிருபாகரன், ஈரோடு வடக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர்ஆகியோர்முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் கலந்துகொண்டு பல்வேறு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் மாவட்ட துணைசெயலாளர்கள் சுரேஷ்குமார், சின்னதுரை, மண்டல தகவல் தொழில் நுட்ப அணி பொறுப்பாளர் டாக்டர் தருண், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ. ஏ. ஆறுமுகம், பொதுக்குழு, செயற்குழு உறுப்பினர்கள் மலர்விழி ராஜா, சந்திரமோகன், சங்கர், கோபால், முத்துலிங்கம், சோமசுந்தரம், மனோகரன்,தமிழ்செல்வன், ஒன்றிய செயலாளர்கள் மாணிக்கம், உமாசங்கர், வெண்ணிலா சேகர், விஜயகுமார், ரத்தினவேல், மாதேஸ்வரன், சக்கரவர்த்தி, ராஜேந்திரன், மூர்த்தி, சிவராமன், மருதமுத்து, டாக்டர் செழியன், பழனிசாமி, சித்தார்த்தன், அழகுவேல், பாலமுருகன், நகர செயலாளர்கள் பாலசுப்பிரமணியன், வேல்முருகன், சார்பு அணி நிர்வாகிகள் முனைவர் சீனிவாசன், ப்ரண்ஸ் ரமேஷ், ராஜசேகரன், சேகர், தனசேகரன், செல்வமணி,பாரதி, சிவராமன், பேரூர் கழக செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகத்தின் சார்பு அணி துணை அமைப்பாளர்கள்,வாக்குசாவடி முகவர்கள் BLA 2 மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடி கள், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**தீர்மானம்**

எய்ம்ஸ் மருத்துவமனை, குடியுரிமைச் சட்டம், நீட் தேர்வு ரத்துக்கு மாபெரும் கையெழுத்து இயக்கம், போன்ற மக்கள் பிரச்சனைகளுக்கு குரல் கொடுத்த நம் இளம் தலைவர் அவர்கள் சட்ட மன்ற தொகுதிக்கு 10 ஆயிரம் பேர் வீதம் கழக இளைஞர் அணிக்கு உறுப்பினர்களை சேர்ந்து 234 தொகுதிகளிலும் திராவிட மாடல் பயிற்சி பாசறைக் கூட்டம் நடத்திக் காட்டிய சரித்திர இளைஞர், நீட் தேர்வுக்கு எதிராக தி.மு.க. இளைஞரணி, மாணவரணி, மருத்துவரணி ஆகிய மூன்று கழக சார்பு அணிகள் மூலம் போராட்டங்கள் முன்னெடுத்து தமிழக வரலாற்றில் முத்திரை பதித்த நம் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நம் சேலம் கிழக்கு மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையத்தில் சுமார் 5 லட்சம் இளைஞர்களை திரட்டி இளைஞரணி மாநில மாநாட்டினை வெற்றிகரமாக நடத்தி காட்டிய இளம் தலைவர் அவர்களுக்கு கழகத்தலைவர்,மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசின் துணை முதல்வர் பொறுப்பு வழங்கிய கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்வதோடு மாண்புமிகு துணை முதல்வராக பொறுப்பு ஏற்றுள்ள இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்வது என சேலம் கிழக்கு மாவட்டம் சார்பாக தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

இறங்கல் தீர்மானம், முரசொலி பத்திரிகையின் ஆசிரியராக இதழியல் துறையின் நட்சத்திரமாக பரிணமித்து, பத்திரிகை துறையில் தனக்கென ஒரு பாணியை கட்டமைத்துக்கொண்டவர் முரசொலி செல்வம்.

1963ல் சட்டப்படிப்பை பாதியிலேயே நிறுத்திவிட்டு, தி.மு.கவின் அதிகாரபூர்வ பத்திரிகையான முரசொலியில் பணியாளராக சேர்ந்த முரசொலி செல்வம் முதலில் பாக்ஸ் செய்திகளுக்கான பொறுப்பும், பின்னர் வி. பி.சிங்கின் ஆட்சியில் முரசொலி மாறன் மத்திய அமைச்சரானதைத் தொடர்ந்து, முரசொலியின் முழுநேர ஆசிரியராகவும் பணியாற்றினார்.

அவர் முரசொலியின் ஆசிரியராக பணியாற்றிய பின்னர் தி.மு.க தலைவர் முத்தமிழறிஞர் டாக்டர்.கலைஞர் அவர்கள் சூட்டிய பன்னீர் செல்வம் என்ற பெயர் நாளடைவில், 'முரசொலி' செல்வம் என்கிற அடைமொழியோடு வலம் வரத் தொடங்கினார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் நன்மதிப்பையும், பொது நன்மதிப்பையும் உயர்த்துவதில் முக்கியப் பங்காற்றிய அவர், முரசொலியில் தனது தலையங்கப் பணியின் மூலம் கட்சியின் வளர்ச்சிக்குப் பங்களித்தார்.

மிகவும் அமைதியான இயல்பு கொண்ட அவர், திமுக நிர்வாகிகள் அனைவரிடமும் எளிதாக பழகக் கூடியவர். முத்தமிழறிஞர் தலைவர் டாக்டர்.கலைஞர் அவர்களின் மருமகனும், தி.மு.கவின் அதிகாரபூர்வ நாளிதழான முரசொலியின் ஆசிரியருமான 'முரசொலி செல்வம் அவர்கள் கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் மூத்த அண்ணனாக இருந்து ஆலோசனைகளை வழங்கி வந்தவர்.

முரசொலி செல்வம் கடந்த 10ம் தேதி மறைந்த விட்டார் என்ற செய்தியை கேட்ட கழகத் தலைவர் அவர்கள் மிகுந்த மனவேதனை அடைந்தார். முரசொலி செல்வம் அவர்களின் மறைவால் மீளாத்துயரத்தில் உள்ள கழகத் தலைவர் அவர்களுக்கும். கழக முன்னோடிகளுக்கும், முரசொலி செல்வம் அவர்களின் குடும்பத்திற்கும் சேலம் கிழக்கு மாவட்டம் ஆறுதலையும், ஆழ்ந்த இறங்கலை தெரிவித்துக் கொள்கிறது." கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



சேலம் கிழக்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக கூட்டம் வாழப்பாடியில் உள்ள தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம், கலைஞர் அரங்கில் சேலம் கிழக்கு மாவட்ட கழக அவைத்தலைவர் மு.ரா.கருணாநிதி தலைமையில், தலைமை கழகத்தால் அறிவிக்கப்பட்டுள்ள சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் கெங்கவல்லி க.ஆனந்த், விழுப்புரம் வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், ஆத்தூர் எம்.எஸ். கணேஷ்குமார், கடலூர் மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், ஏற்காடு சி.ஆனந்தகுமார், மாநில இளைஞர் அணி துணை செயலாளர், வீரபாண்டி டி.கே.கிருபாகரன், ஈரோடு வடக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.



நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் நாகையில் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் பேசினார். உடன் தொகுதி பார்வையாளர்கள் நாகை தாட்கோ தலைவர் உ.மதிவாணன், கீழ்வேளூர் மாநில விவசாய அணி துணைச் செயலாளர் இரா.சங்கர், வேதாரண்யம் மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜெயபிரகாஷ், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப.கோவிந்தராசன், க.இராஜேந்திரன், இல. மேகநாதன், க.மறைமலை, மாவட்டக் கழக பொருளாளர் மு.லோகநாதன், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், மாவட்டக் காக துணைச் செயலாளர்கள் சோ.ரவிச்சந்திரன், ஆரூர்.மணிவண்ணன், கற்பகம் மற்றும் பலர் உள்ளனர்.

### கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில்

# வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் பணியில் முழுமையாக ஈடுபடுவீர்!

## மாவட்ட செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. அறிக்கை!

*கிருஷ்ணகிரி, அக்.28-*

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் அறிவுறுத்தலின்படி இந்திய தேர்தல் ஆணையம் வருகின்ற 01.01.2025 தகுதியேற்படுத்தும் நாளாகக் தமிழகத்திலுள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட புகைப்படத்துடன் கூடிய வரைவு வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணையம் 29.10.2024 அன்று வெளியிட உள்ளது.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட கிருஷ்ணகிரி, பர்கூர், ஊத்தங்கரை சட்டமன்ற தொகுதிகளில் 29.10.2024 முதல் 28.11.2024 வரை வாக்காளர்களைச் சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும், திருத்தம் செய்யவும் மனு செய்ய காலஅவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

இதுதவிர தலைமை தேர்தல் அதிகாரி அறிவிப்பின்படி 09-11-2024 - 10-11-2024 மற்றும் 23-11-2024, 24-11-2024 சனி ஞாயிறு நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் காலை 0930 மணி முதல் மாலை 0530 மணி வரை சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளது.

அதன்படி இந்த நாட்களில் வாக்காளரே தாமாக முன்வந்தோ அல்லது கழகத்தினரோ வாக்காளர் பட்டியலில் உள்ள வாக்கஎர்களின் விவரங்களை சரி பார்த்து விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும் 01012025 அன்று 18 வயது நிரம்ப கூடிய புதிய வாக்காளர்களும் அவர்களது பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்ள அதற்கான படிவங்களை பெற்று பூர்த்தி செய்து அந்தப் படிவங்களை அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் கொடுக்க வேண்டும். இதனஅடிப்படையில் 01-01-2025 ம் தேதி 18 வயது நிரம்பியவர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம்பெறாத பெயர்களையும், புதிதாக குடிபெயர்ந்து உள்ளவர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியிலிருந்து இடம்பெயர்ந்த வாக்காளர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும் தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தலுக்கு படிவம் 6 ம், பெயர் நீக்கம் செய்திட படிவம் 7 ம் வாக்காளர் விவரங்கள் உள்ள தவறுகளை திருத்தம் செய்ய ஒரே சட்டமன்றத் தொகுதிக்குள் திருத்தம் முகவரி மாற்றம் நகல் வாக்காளர் அட்டை பெற படிவம் 8 ம் அயல்நாடு வாழ் வாக்காளர் சேர்க்க படிவம் 6 A, ஆதார் எண், வாக்காளர் அடையாள அட்டையுடன் இணைக்க படிவம் 6 B விண்ணப்பம் பூர்த்தி செய்து அளித்திட வேண்டும். இதுவரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாதவர்கள் மற்றும் இடம் மாறி வந்து வாக்காளர்களாக சேர்க்க விரும்புபவர்களும், பெயர் சேர்த்துக்கொள்ள வேண்டிய விண்ணப்பப் படிவமான படிவம் 6 முழுமையாக பூர்த்தி செய்திட வேண்டும். குறிப்பாக படிவம் 6 ன் காலம் IV மனுதாரரது முந்தைய முகவரி தவறாது எழுதிட வேண்டும்.

வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் 29.10.2024

பெயர்களைச் சேர்க்க/ நீக்க/ திருத்தம் செய்வதற்கு மனு கொடுக்க கால அவகாசம் 29.10.2024 முதல் 28.11.2024 வரை.

சிறப்பு முகாம் நடைபெறும் நாட்கள் நவம்பர் 16 17 தேதிகள் மற்றும் நவம்பர் 23 24 ஆகிய தேதிகளில் நடை பெற உள்ளது.

இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடும் நாள் 06.01.2025

மேலும் மேற்கண்ட நாட்களில் நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு பணியிலும், சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்களிலும் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழ உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், வார்டு, வட்ட, கிளை கழக செயலாளர்கள், கவுன்சிலர்கள் மற்றும் வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் (BLA2), பூத்கமிட்டி உறுப்பினர்கள் (BLC) உள்ளிட்ட கழகத் தோழர்கள் அனைவரும் தங்களை முழுமையாக ஈடுபடுத்தி இந்த பணிகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் இந்த பணியின் விவரங்களை அவ்வப்போது மாவட்ட கழகத்திற்கு தெரிவிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வாக்காளர் சேர்க்கும் பணியின் போது நமது கழகத்தின் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள (BLA2) மற்றும் பூத்கமிட்டி உறுப்பினர்கள் (BLC) ஆகியோர் இந்தப் பணியினை முழுமையாக ஈடுபட்டு 2026 சட்டமன்றத் தேர்தல் வரை தேர்தல் ஆணையத்தால் நியமிக்க ப்பட்டுள்ள (BLO) க்களுடன் உடன் இருந்து கண்காணிக்கப் பட வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. அறிவித்துள்ளார்.

# உத்திரமேரூரில் நல திட்ட உதவிகள் வழங்கல்!

சென்னை, அக். 28 –

முதலமைச்சரும் பவள விழா கண்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் நல்லாட்சியில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் உத்திரமேரூர் ஒன்றியத்திற்குட்பட்ட அனைத்து ஊராட்சிகளுக்கும் துப்புரவு பணியாளருக்கு தேவையான தற்காப்பு உபகரணங்கள் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் 100 நாள் வேலை திட்டத்தில் பணியாற்றும் பணியாளர்களுக்கு 2024 – 25 ஆம் ஆண்டிற்கான உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி உத்திரமேரூர் ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் நேற்று (26.10.2024) மதியம் சுமார் 3 மணி அளவில் நடைபெற்றது.

இந் நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் செயலாளரும் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினருமான க.சுந்தர், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பி னர் க.செல்வம் ஆகியோர் பயனாளகளுக்கு வழங்கினர்.



திருப்பூர் ஜெய்வாபாய் மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 2024 – 2025 ஆம் கல்வியாண்டில் குறுவட்ட அளவிலான குழுப் போட்டிகள், தடகளப் போட்டிகள் மற்றும் முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற விளையாட்டு வீராங்கனைகளுக்கு கோப்பை மற்றும் சான்றிதழ்களை திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர், மாவட்டச் செயலாளர் க. செல்வராஜ் வழங்கினார். இதில் மாநகராட்சி துணை மேயர் ரா.பாலசுப்பிரமணியம், மாவட்ட துணைச் செயலாளர் டிஜிட்டல் எஸ்.சேகர், கல்வி குழு தலைவர் பெ.திவாகரன், மாமன்ற உறுப்பினர் வெ. ராதாகிருஷ்ணன், பொதுக்குழு உறுப்பினர் சலீம் (எ) அப்துல் ரகுமான், மாவட்ட இளைஞர் அணி முன்னாள் துணை அமைப்பாளர் ஷா.அப்துல்ரஹீம், பொதுக்குழு முன்னாள் உறுப்பினர் மு.சிவபாலன் உள்பட மாவட்ட, மாநகர, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், ஆசிரியர் பெருமக்கள் பலர் உள்ளனர்.